**Copy of Deposition**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Summary Trial Case No.553/2022**
**Complainant Side Witness**:1

| Name | பானுமதி ( PW1) | Dated | 27.05.2024 |
|---|---|---|---|
| Father's Name | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th day of May 2024** by P. Arulkumar, Magistrate Clerk, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present)***

**பு.சா:-1 குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு):-**

நான் எதிரிக்கு வீட்டில் வைத்து ரூ.3,00,000/- கடன் கொடுத்தேன். கடந்த 10 வருடங்களாக எனக்கு எதிரியை தெரியும். எனது கணவருக்கு எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் விவசாயம் செய்து வருகிறார். 24.05.2022ம் தேதி அன்று எதிரிக்கு பணம் கொடுத்தேன். எதிரி வழக்கு காசோலையை பூர்த்தி செய்து கையொப்பம் செய்து கொடுத்தார். வழக்கு காசோலையில் அனைத்து சங்கதிகளையும் பூர்த்தி செய்துதான் எதிரி கொடுத்தார். வழக்கு காசோலையில் சங்கதிகள் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எதிரி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் இல்லை.

2. எனது கணவர் ஆட்டோ பைனான்ஸ் வைத்துள்ளாரா என்றால் இல்லை. எதிரி எனது கணவரிடம்தான் ரூ.35,200/- வண்டி கடன் வாங்கினார் என்னிடம் வாங்கவில்லை, அவ்வாறு வாங்கிய பணத்திலும் ரூ.25,000/-த்தை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் புகார்தாரருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பெண் என்பதால் எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் அவ்வளவு தொகை வீட்டில் வைத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, வீட்டில்தான் பணம் வைத்திருந்தேன்.

**Copy of Deposition**

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(Sd xxx V. Loganathan)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| Sd xxx | Sd xxx | Sd xxx |
| Complainant/Petitioner Counsel | Witness | Accused/ Defence counsel |

**Copy of Deposition**